டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்..,    எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER
★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com    PRGI:TNTAM/25/A1018    Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01    ISSUE: 143    17.11.2025    MONDAY    IPPASI : 30    PRICE : RS.5/-
மலர் : 01    இதழ் : 143    17.11.2025    திங்கள்கிழமை    ஐப்பசி : 30    விலை : ரூ.5/-

3 கடந்த 30 ஆண்டுகளில் முதல்முறை மாநிலங்களவை எம்.பி.க்களை இழக்கும் ஆர்ஜேடி

4 திமுக விஜய்க்கு தொல்லை தருவதில்லை : அமைச்சர் அன்பில் மகேஷ் பேட்டி

2 பிஹார் தேர்தல் முடிவை விமர்சன கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டும்" கமல்ஹாசன் எம்.பி

# பிஹாரில் புதிய அரசு பதவியேற்பு எப்போது? காந்தி மைதானத்தில் ஏற்பாடுகள் தீவிரம்

பாட்னா: நவ.17-

பிஹார் சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி அபார வெற்றி பெற்ற நிலையில், புதிய அரசு அமைக்கும் பணிகள் வேகமெடுத்துள்ளன. பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கும் வகையில் நவம்பர் 19 அல்லது 20 ஆம் தேதி பதவியேற்பு விழா நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2025 பிஹார் சட்டப்பேரவை தேர்தலில் பாஜக 89 இடங்களில் வென்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது, அதைத் தொடர்ந்து நிதிஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளம் 85 இடங்களை வென்றது. லோக் ஜனசக்தி (ராம்விலாஸ்) 19 இடங்களையும், எச்ஏஎம் 5 இடங்களையும், ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா 4 இடங்களையும் வென்றன. எதிக்கட்சிகளின் மகா கூட்டணி 35 இடங்களை மட்டுமே வென்றது. ஓவைசி கட்சி 5 இடங்களிலும், பிஎஸ்பி ஒரு இடத்திலும் வெற்றி பெற்றது.

இந்த நிலையில், பிஹாரில் புதிய அரசு அமைக்கும் பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. பதவியேற்பு விழாவுக்காக பாட்னாவின் காந்தி மைதானத்தில் ஏற்பாடுகள் முழு வீச்சில் உள்ளன, இந்த நிகழ்வில் பிரதமர்



மோடி மற்றும் பாஜக ஆளும் மாநிலங்களின் முதலமைச்சர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

18வது பிஹார் சட்டப்பேரவை தேர்தல் முடிவுகளை தேர்தல் ஆணையம் இன்று ஆளுநர் ராஜேந்திர அர்லேகரிடம் சமர்ப்பிக்கும். அதன் பிறகு புதிய சட்டப்பேரவையை அமைப்பதற்கான அறிவிப்பு வெளியிடப்படும்.

17வது சட்டப்பேரவையை கலைப்பதற்கு ஒப்புதல் அளிக்க முதல்வர் நிதிஷ் குமார் நாளை அமைச்சரவைக் கூட்டத்தை கூட்டியுள்ளார். அதன் பின்னர் அவர் ராஜ் பவனுக்குச் சென்று தனது ராஜினாமா கடிதத்தை ஆளுநரிடம் வழங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர் பதவி விலகியவுடன், கூட்டணியின் அடுத்த தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள கட்சிகள் தங்கள் சட்டப்பேரவை கட்சிக் கூட்டங்களை நடத்தும். அதன் பின்னர், தேசிய ஜன்நாயக கூட்டணியின் தலைவர்கள் ஆலோசித்து புதிய முதல்வர் மற்றும் அமைச்சரவையை தேர்ந்தெடுத்து, புதிய அரசாங்கத்தை அமைக்க ஆளுநரிடம் உரிமை கோருவார்கள்.



## தமிழ்நாடு மருத்துவ துறை அமைச்சுப்பணி அலுவலர் சங்க மாநில தலைவராக பி.ஜே.ரவிக்குமார் தேர்வு

மதுரை. நவ.17

திருச்சியில் 15.11.2025 அன்று மாநில மத்திய செயற்குழு கூட்டம் தமிழ்நாடு மருத்துவத்துறை அமைச்சு பணி அலுவலர் சங்கம் சார்பாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு மருத்துவ துறை அமைச்சுப் பணி அலுவலர் சங்க மாநில தலைவராக பி.ஜே.ரவிக்குமார், ஒருமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். இக்கூட்டத்திற்கு தேர்தல் அலுவலராக சூரியநாராயணன், ரமேஷ்கண்ணா மற்றும் கவிதா ஆகியோர் தேர்தலினை நடத்தி, அறிவிப்பினை வெளியிட்டனர். அதனை முன்னிட்டு, மாநில பொறுப்புத் தலைவர் செந்தில்வேல், பி.ஜே. ரவிக்குமார் அவர்களை தமிழ்நாடு மருத்துவ துறை அமைச்சுப் பணி அலுவலர் சங்கத்தின் மாநில தலைவராக முன்மொழிந்தார். இக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக, மகேந்திரகுமார், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய சங்கத்தின் மாநில தலைவர் மேனாள் மாநில தலைவர் தண்டபாணி, மேனாள் மாநில தலைவர் தேசிங்குராஜா, மேனாள் மாநிலத் துணைத் தலைவர் சந்திரசேகர், மாநில பொருளாளர் பார்த்தசாரதி, அமைப்புச்செயலாளர் பாலமுருகன்,மேலும் மதுரை மாவட்ட தலைவர் இளங்கோ, சென்னை சேகர், கமலக்கண்ணன், திருச்சி சதீஷ்பாபு, ஆரோக்கியராஜ், ஆனந்த்,கவிதா, லட்சுமி, ஆகியோர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

## திண்டுக்கல் பிள்ளையார்நத்தம் தொடக்கப்பள்ளியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் ஆய்வு

### ஆத்தூர் தொகுதியில் அதிரடியாக ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர், கலக்கத்தில் வருவாய் துறை அதிகாரிகள்

சின்னாளபட்டி, நவ.17

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் செ.சரவணன், பிள்ளையார்நத்தம் தொடக்கப் பள்ளியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை ஆய்வு செய்தார் ஆத்தூர் தொகுதியில் அதிரடியாக மாவட்ட ஆட்சியர் ஆய்வு செய்யவந்ததால் வருவாய்த்துறை அதிகாரிகள் கலக்கம் அடைந்தனர்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள தொகுதிகளில் மிகப்பெரிய தொகுதியாகும். தமிழகம் முழுவதும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நடைபெற்று வருகிறது. சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் வாக்குசாவடி மையங்களில் சிறப்பு முகாம் நடைபெற்று வாக்காளர்



பட்டியலில் வாக்காளர் சேர்க்கை தீவிரமாக நடைபெற்று வருகிறது. பிள்ளையார்நத்தம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அதிரடியாக மாவட்ட ஆட்சியர் செ.சரவணன் ஆய்வு செய்தார். அப்போது அப்பகுதியைச் சேர்ந்த அங்கன்வாடி பணியாளர்களிடம் ஆட்சியர் அவர்கள் முறையாக விண்ணப்பம் வினியோகம் செய்தீர்களா எனக் கேட்டதோடு எத்தனை பேர்களிடம் முவீறாயக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பெற்றுள்ளீர்கள் என கேட்டார் அதன்பின்னர் வாக்காளர் பட்டியலில் சேர்க்கை குறித்து அங்குள்ள பணியாளர்களை கேட்டறிந்தார். அதனைத் தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் நிலக்கோட்டை பகுதிக்கு ஆய்வுக்கு சென்றார். ஆய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர்கள், முருகன், பத்மாவதி, வருவாய் ஆய்வாளர் நாகேந்திரன், முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் உலகநாதன், ஊராட்சி மன்ற செயலாளர் சபீன்தேவராஜ், தி.மு.க. மாணவரணியைச் சேர்ந்த அருண் உட்பட பலரும் இருந்தனர்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

அழையுங்கள்! வாசகர்களே!!
தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)
(24 x 7)
88705 00000
sakkraviyugam2025@gmail.com

## பாடாலூர் சிவன்கோவில் எங்க இருக்கு....

# எனக்கே டவுட்!..

## சாரங்கபாணி குமுறல் ...

பெரம்பலூர், நவ.17-

பெரம்பலூர் மாவட்டம், பாடாலூரில் உள்ள சிவன்கோவில் நுழைவு வாயில் பகுதி எப்போதும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு உள்ளது என பலர் கூறி வந்த நிலையில், இதுபற்றி கிராம முக்கியஸ்தரான சாரங்கபாணி என்பவரிடம் கேட்டபோது , அவரோ, நீங்களே போய் பாருங்க கோயில் வாசப்படிலேயே ரெண்டு கார் நிக்குது. சாமி கும்பிட போறவங்க எப்படி போக முடியும். கோயில்ல பூஜை பண்ற அய்யர் இந்த மாதிரி செய்யலாமா? பாலு அய்யர்தான் இப்படி அக்கிரமம் பண்றாரு. இவருக்கு கோயில் இடத்துல குடியிருக்க விட்டதுக்கு கோயிலை இடம் தெரியாம பண்றாரு

நானும் பல தடவ சொல்லி சொல்லி சலிச்சி. புளிச்சி போச்சி. பழைய மணியார் பேரன் ரெங்கராஜும் சொல்லியிருக்கார். எத்தன தடவதான் சொல்றது. வெளியூர்ல உள்ளவங்க நிறைய பேர் போக்குவரத்து வசதிக்காக இங்க வந்து குடியிருக்காங்க. அவங்க வியாழன், சனிக்கிழமைல விளக்கு போட வந்தா கோயில் இருக்கற இடமே தெரியாம கேட்டு தெரிஞ்சிக்க வேண்டி இருக்கு. அந்தளவுக்கு வாசப்படியே தெரியாம இருக்கு. அதைவிட கோயில் பக்கத்துலதான் நான் குடியிருக்கேன். எனக்கே கோயில் தெரியல

கிழக்கால வீதியில தெற்க கடைசியில் நின்னு பார்த்தா கோயில் அப்படியே ஜெகஜோதியா தெரியும். இப்ப என்னன்னா பக்கத்துல இருக்க எனக்கே தெரியல, சாமி புறப்பாட்டுக்கு அலங்காரம் பண்ண கூட அய்யர் வர்றதில்ல. எங்க பையன்களை வச்சிதான் நாங்க பாத்துக்கறோம். கோயிலை வச்சி பாலு அய்யருக்கு பல வழிகளில் வருமானம் வந்தாலும் உள்ளூர் கோயில் கும்பாபிஷேகத்துக்கு கறாரா காசு வாங்கிக்கிறார். அது எப்படியோ தொலஞ்சிட்டு போகுதுன்னு குடுத்தா கூட இப்படி கோயில் தெரியாம காரை நிறுத்திவிட்டு அக்கிரமம். பண்றார். ஊர்ல நாலு பேத்த கையில வச்சிக்கிட்டு பாலு அய்யர் இப்படி பண்றது அந்த சிவனுக்கே அடுக்குமா தெரியல. கிராமத்துல சீக்கிரம் கூட்டம் போட்டு இதுக்கு ஒரு முடிவு பண்ணனும் என்று தனது உள்ளக் குமுறல்களை கொட்டி தீர்த்தார் பாடாலூர் மிராஸ்தார் சாரங்கபாணி

# திருப்பூர் மாவட்ட பெண் வீராங்கனைகளுக்கு தடகளப் போட்டிகள் ; பங்கேற்க திருப்பூர் தடகள சங்கம் தலைவர் RBR.சண்முகசுந்தரம் அழைப்பு

திருப்பூர், நவ.17-
திருப்பூர் மாவட்ட தடகள சங்கத்தின் தலைவர் RBR.சண்முகசுந்தரம் வெளியிட்டுள்ள அறிக்கை:
இந்திய தடகள சம்மேளனம் மற்றும் இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இணைந்து, மத்திய அரசின் ஆதரவுடன், நாட்டிலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள திறமையான பெண் தடகள வீராங்கனைகளைக் கண்டறிந்து, அவர்களை உலக அளவிலும், ஒலிம்பிக் அளவிலும் பங்கேற்கச் செய்து, வெற்றிபெற அனைத்து விதமான உதவிகள் அளிக்கப்படுகிறது. அதன்படி, "அஸ்மிதா லீக்" என்ற பெயரில் 14 மற்றும் 16 வயதிற்குட்பட்ட, பெண் வீராங்கனைகளுக்கு தடகளப் போட்டிகள் நடத்தப்படுகிறது.
திருப்பூர் மாவட்டம் தேர்வு :
முதற்கட்டமாக நாட்டில், 300 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அதில், திருப்பூர் மாவட்டமும் தேர்வு செய்யப்பட்டுள்ளது. திருப்பூர்




மாவட்ட அளவிலான இந்தவகை தடகளப் போட்டிகள், எதிர்வரும் 21ம் தேதி வெள்ளிக்கிழமை, திருப்பூர், சிக்கண்ணா அரசுக் கல்லூரி வளாகத்திலுள்ள, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய தடகள ஸ்டேடியத்தில் நடக்கிறது. அதில் 14 வயதுக்கு உட்பட்ட பெண்கள் 21.12.2011 முதல் 20.12.2013க்கு இடையில் பிறந்தவர்களாகவும், 16 வயதுக்கு உட்பட்ட பெண்கள் 21.12.2009 முதல் 20.12.2013க்கு இடையில் பிறந்தவர்களாகவும் இருக்க வேண்டும். போட்டிகளில் பங்கேற்க நுழைவுக்கட்டணம் கிடையாது. வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழும், பதக்கமும் வழங்கப்படும். பதிவுக்கான கடைசி தேதி 19.11.2025. இணைப்பிலுள்ள படிவம் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.
போட்டிகள்:-
(பெண்கள் 14 வயதுக்குட்பட்டோர்)
1. டிரையத்லான் ஏ 60மீ, நீளம் தாண்டுதல் (5 மீ அணுகுமுறை), உயரம் தாண்டுதல் (சிஸர் முறை)
2. டிரையத்லான் பி 60மீ, நீளம் தாண்டுதல் (5 மீ அணுகுமுறை), குண்டு எறிதல் (1 கிலோ பின்புறம் எறிதல்)
3. டிரையத்லான் சி 60மீ, நீளம் தாண்டுதல் (5 மீ அணுகுமுறை), 600 மீ
4. 5 மீ., ஓடுபாதையுடன் கூடிய கிட்ஸ் ஜாவலின்,
(பெண்கள் 16 வயதுக்குட்பட்டோர்)
1. 60 மீ., 600 மீ., உயரம் தாண்டுதல் (சிஸர் முறை), நீளம் தாண்டுதல் (5 மீ அணுகுமுறை), வட்டு எறிதல் (1 கிலோ), குண்டு எறிதல் (3 கிலோ - நின்ற நிலையில்), ஈட்டி எறிதல் (10 மீ அணுகுமுறை - 500 கிராம்).
போட்டியில் பங்கேற்பவர்கள் 8667799305 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# பிஹார் தேர்தல் முடிவை விமர்சன கண்ணோட்டத்தோடு பார்க்க வேண்டும்" கமல்ஹாசன் எம்.பி

பிஹார், நவ.17-
பிஹார் தேர்தல் முடிவை விமர்சனக் கண்ணோட்டத்தோடுதான் பார்க்க வேண்டும் என மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் எம்பி நேற்று தெரிவித்தார்.
சென்னையில் இருந்து கொடைக்கானல் செல்ல, மதுரை விமான நிலையத்துக்கு நேற்று வந்த கமல்ஹாசன் எம்பி செய்தியாளர்களிடம் கூறியதாவது: பிஹார் தேர்தல் முடிவுகளை விமர்சனக் கண்ணோட்டத்தில்தான் பார்க்க வேண்டும். தமிழகம் கவனமாகவும், விழிப்போடும் இருக்க வேண்டும். மேகேதாட்டு அணை பிரச்சினை நான் சிறு வயதாக



இருந்தபோதிருந்தே நடந்து கொண்டிருக்கிறது. தற்போது எனது தாடியின் நிறமே மாறி விட்டது. ஆனால், தண்ணீர் கருப்பாகவும், தாடி வெள்ளையாகவும் மாற ஆரம்பித்து விட்டது.
புதிதாக கட்சி தொடங்குபவர்களின் குறிக்கோள் உயர்ந்ததாக இருக்க வேண்டும். உதாரணத்துக்கு நடிப்பதாக இருந்தால்கூட இருப்பதிலேயே, தன் பிள்ளை சிறந்த நடிகராக வேண்டும் என்றுதான் யாரும் நினைப்பார்கள். ஏழையாக இருப்பவர்கள் கூட, தனது பிள்ளையை கொஞ்சும்போது மகராஜனே.. என்றுதான் கொஞ்சுவர். ஆசை எல்லோருக்கும் இருக்கும். என்று கூறினார்.
2026 சட்டப்பேரவை தேர்தலில் திமுகவுக்கும் தவெகவுக்கும் இடையேதான் போட்டி என்று விஜய் கூறுவதாக செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அவர் பதில் அளிக்கும்போது, எங்களது பார்வைதானே; ஓட்டு அவர்களுடையது (மக்களுடையது), என்றார்.

# எஸ்ஐஆர் திருத்தப் பணிகள்: உஷார்படுத்துகிறார் விஜய்

சென்னை, நவ17
சென்னை.தவெக தலைவர் விஜய் நேற்று வெளியிட்ட வீடியோவில் பேசியிருப்பதாவது: இந்திய அரசியல் சாசனம் நம் தமிழ்நாட்டில் இருக்கும் எல்லாருக்குமே கொடுக்கப்பட்ட உரிமையில் மிக முக்கியமானது. வாக்காளர் அடையாள அட்டை, வாக்குரிமை என்பது ஒரு மனிதன் உயிரோடு இருக்கிறார் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது.
இதைப் பற்றி நான் முதலில் கேள்விப்பட்ட உடனே, எனக்கு ரொம்ப அதிர்ச்சியாகத்தான் இருந்தது. இப்போது நான் பேசிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், தமிழ்நாட்டில் இருக்கும் யாருக்குமே ஓட்டு போடும் உரிமையே இல்லை என்று கூறி நம்ப வைக்கலாம். நான் பயமுறுத்துகிறேன் என்று நினைக்க வேண்டாம். அதுதான் நிஜமும் கூட. ஓட்டு போடும் உரிமையே இல்லாத மாதிரி ஒரு நிலைமை வந்தாலும் வரலாம். இதற்கு முக்கிய காரணம் அந்த எஸ்.ஐ.ஆர். சிறப்பு தீவிர திருத்தம். இப்போது இந்த எஸ்ஐஆர் தமிழ்நாட்டில் எப்படி செல்லுபடியாகும்? சிறப்பு தீவிர திருத்த



படிவத்தை நாம் பூர்த்தி செய்து, பி.எல்.ஒ.விடம் கொடுக்க வேண்டும். அதை தேர்தல் ஆணையம் சரிபார்க்கும். அதன் பிறகு வாக்காளர் பட்டியலை வெளியிடுவார்கள். அந்த வாக்காளர் பட்டியலில் நமது பெயர் இருக்க வேண்டும். அப்போது தான் நாம் ஓட்டு போட முடியும்.
இதில் நிறைய குழப்பங்களும் இருக்கின்றன. மேலும் புதிய வாக்காளர்களுக்கு திஷ்ஃபோர்ம்6 என்று ஒன்று இருக்கிறது. அதை பூர்த்தி செய்து, சம்மந்தப்பட்ட அலுவலகத்தில் நேரடியாக கொடுக்கலாம். ஆன்லைனிலும் விண்ணப்பிக்கலாம். அதற்கான ஆதாரங்களையும் எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். அதன்பின் செல்போனில் குறுஞ்செய்தி வரும். அதன்பிறகு அதில் வரும் படிவத்தை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். முதலில் உங்கள் பகுதியின் பி.எல்.ஓ. யாரென்று தெரிந்து வைத்திருக்க வேண்டும். தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தில் சென்று அதை பார்த்துக் கொள்ளலாம். குறிப்பாக அவர்களின் செல்போன் எண்ணையும் தெரிந்து கொள்ளலாம்.
இந்த ஆறு கோடியே 36 லட்சம் வாக்காளர்களுக்கு, ஒருத்தர் விடாமல் இந்த ஒரே மாதத்தில் எப்படி எல்லாருக்கும் அந்த படிவம் சென்று சேரும்? அப்படி இந்த படிவம் கிடைக்கவில்லை என்றால் கவலை வேண்டாம். இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆன்லைனில் சென்று படிவத்தை பெற முடியும். இதை உங்கள் குடும்பங்களுக்கு, உறவினர்களுக்கு, அருகில் உள்ள வீட்டார்களுக்கு, தெரிந்தவர்களுக்கு, தெரியாதவர்களுக்கும் என்று அனைவருக்கும் செய்து கொடுங்கள்.
முக்கியமாக நிமீஸீஜீ இளைஞர்கள், முதல் முறை வாக்காளர்கள் தான் கவனமாக இருக்க வேண்டும். காரணம் என்னவென்றால், வரவிருக்கும் தேர்தலில் முக்கிய அங்கமே நிமீஸீஜீ இளைஞர்கள் தான். இவர்களை தொந்தரவு செய்வதற்கு என்னவெல்லாமோ தில்லு முல்லு வேலைகள் செய்வார்கள். நம்முடைய முக்கிய ஆயுதமே, ஓட்டு, ஜனநாயகம் தான். தமிழ்நாடு முழுவதும் வாக்குச்சாவடி முன் திரண்டு நிற்க வேண்டும். அதை பார்த்து தமிழ்நாடே தமிழக வெற்றிக் கழகமா... இல்லை, தமிழக வெற்றிக் கழகம்தான் தமிழ்நாடா என்று நினைக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசியுள்ளார்.
தேர்தல் ஆணையத்துக்கு கடிதம்: தேர்தல் ஆணையத்துக்கு விஜய் எழுதியுள்ள கடிதத்தில், ''தேர்தல் ஆணைய கூட்டங்களுக்கு தவெகவுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை. பதிவு பெற்ற கட்சி என்ற அடிப்படையில் தவெகவிற்கும் அழைப்பு விடுக்க வேண்டும். தேர்தல் செயல்முறைகள் முழுமையாக, வெளிப்படையாக இருக்க வேண்டும் என்றால், தவெகவையும் அடுத்தடுத்த ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்பு கூட்டங்களுக்கு தேர்தல் ஆணையம் அழைக்க வேண்டும். தேர்தல் ஆணையத்திற்கு முழு ஒத்துழைப்பை வழங்க தவெக தயாராக இருக்கிறது. தமிழக மாநில தேர்தல் ஆணையத்திற்கும், தமிழக முதன்மை தேர்தல் அதிகாரிக்கும் உரிய அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்'' என்று கூறியுள்ளார்.

# திருப்போரூர் அருகே வெடித்து சிதறிய பயிற்சி விமானத்தின் கருப்பு பெட்டி மீட்பு

திருப்போரூரை, நவ17-
திருப்போரூரை அடுத்த நெம் மேலியில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக உப்பு தொழிற்சாலை வளாகத்தில் விழுந்துவெடித்துசிதறியப யிற்சி விமானத்தின் கருப்பு பெட்டி மற் றும் சிதறிய விமான பாகங்களை, விமானப்படைத் துறையினர் மீட்டு தாம்பரம் விமானப்படை தளத்துக்கு கொண்டு சென்றனர்.
சென்னையை அடுத்த தாம் பரம் விமானப்படை பயிற்சி தளத்திலிருந்து நேற்று முன் தினம் பிற்பகல் புறப்பட்ட பயிற்சி விமானம், திருப்போரூர் அருகே வானில் பறந்து கொண் டிருந்தபோது, விமானத்தில் ஏற்பட்ட தொழில் நுட்ப கோளாறால் விமானியின் கட்டுப்பாட்டை இழந்தது. பயிற்சி விமானம் நெம்மேலி புறவழி சாலை அருகே உள்ள உப்பு தயாரிப்பு தொழிற்சாலை வளாகத்தில்
விழுந்து வெடித்து சிதறியது. முன்னதாக, விமானி பாராசூட் மூலமாக விமானத்தில் கீழே குதித்து உயிர் தப்பினார். விமானம் விழுந்த இடத்தில் சிதறிய விமான



பாகங்களை விமானப் படையினர் சேகரித்தனர். விபத்து நடந்த இடத்தில், தாம்பரம் விமானப் படையினர் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வந்து, மீட்பு பணி களை மேற்கொண்டனர். 2வது நாளாக நேற்று 15 அடி பள்ளத் தின் சேற்றில் புதைந்த விமானத் தின் கருப்பு பெட்டி உள்பட பிற பாகங்களை தேடும் பணிகளில் ஈடுபட்டனர்.
இதில், 2 பொக் லைன், ஒரு கிரேன் மூலம் மீட்பு பணிகள் நடைபெற்றன. காலை 7 மணிக்கு தொடங் கிய பணிகள் பகல் 12:30 மணி வரை நீடித்தது. இதில், சேற்றில் சிக்கியிருந்த கருப்பு பெட்டியை மீட்ட விமானப் படை வீரர்கள் பாதுகாப்பாக எடுத்து சென்றனர். விமானத்தின் பிற பாகங்களை சேகரித்தனர்.
இதனிடையே, செங்கை கோட்டாட்சியர் கணேஷ்கு மார், திருப்போரூர் வட்டாட்சியர் சரவணன் உள்ளிட்ட அதிகாரிகள் சம்பவ இடத்தை பார்வை யிட்டனர். பின்னர், விமானப் படை அதிகாரிகளுடன் ஆலோ சித்தனர். வெடித்து சிதறிய விமானத்தின் கருப்பு பெட்டி மீட்கப்பட்டுள்ளதாகவும். அடுத்த கட்ட பணிகளை விமானப் படை துறையினர் மேற்கொள்வர் எனவும் வருவாய்த் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.
மீட்கப்பட்ட கருப்பு பெட்டி, சேகரிக்கப்பட்ட மற்ற பாகங்கள் தாம்பரம் விமானப்படை தளத்துக்கு வாகனத்தின் மூலம் கொண்டு செல்லப்பட்டது. கருப்பு பெட்டி டெல்லி விசாரணை பிரிவுக்கு கொண்டு செல்லப்பட உள்ளதாக போலீஸார் தெரிவித்தனர்.

# ஜனநாயக முறையில் தேர்தல் நடப்பதை தேர்தல் ஆணையம்தான் உறுதி செய்ய வேண்டும்: பிரேமலதா

மதுரை, நவ,17-
மதுரை விமான நிலையத்தில் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா பேட்டி
மதுரை: எஸ்ஐஆர் மீது தேர்தல் ஆணையம் தான் உறுதியான நிலைப்பாட்டை எடுத்து ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்த வேண்டும் என தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா கூறினார்
மதுரையில் நடைபெறும் பூத் கமிட்டி கூட்டத்தில் பங்கேற்பதற்காக சென்னையில் இருந்து தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விமானம் மூலம் இன்று (ஞாயிறுக்கிழமை) மதுரை வந்தார் விமான நிலையத்தில் அவர் செய்தியாளரிடம் கூறுகையில், "இன்று மூன்றாம் கட்ட சுற்றுப்பயணம் மதுரையிலிருந்து ஆரம்பித்து.. டிசம்பர் 2ம் தேதி ஈரோட்டில் நிறைவு பெறுகிறது.
தமிழகத்துக்கு வர வேண்டிய முதலீடு



ஆந்திராவுக்கு சென்றதை நான் கவலையுடன் தான் பார்க்கிறேன். இது போன்ற திட்டங்கள் எல்லாம் இங்கு வரவேண்டும். அப்போது தான் நிறைய இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற முடியும். இதற்கு உரியவர்கள் பதில் சொல்ல வேண்டும். வருங்காலத்தில் பெரிய திட்டங்கள் தமிழ்நாட்டுக்கு வருவதை உறுதி செய்ய வேண்டும் என்பது தான் தேமுதிகவின் நிலைப்பாடு..
தேர்தலில் பல ஆண்டுகளாக முறைகேடு நடைபெறுகிறது. தேர்தல் ஆணையம்தான் உறுதியாக நிலைப்பாடை எடுத்து. ஜனநாயக நாட்டில் ஜனநாயக முறைப்படி தேர்தல் நடப்பதை உறுதி செய்ய வேண்டும். தவெக எஸ்ஐஆர்க்கு எதிராக போராடுமா என்பது பற்றி நான் இப்போது கருத்து சொல்ல விரும்பவில்லை. மேலும், 2026ல் யாருடன் கூட்டணி என்பது குறித்து கடலூர் மாநாட்டில் முடிவெடுக்கப்படும்.
தூய்மை பணியாளர்களுக்கு உணவு கொடுப்பதால் மட்டுமே அவர்களது தேவை பூர்த்தி ஆகாது. அவர்களது தேவையை அரசு பூர்த்தி செய்ய வேண்டும்." என்றார்.

# தமிழகத்தில் நவ.17 சென்னை உள்ளிட்ட 7 மாவட்டங்களில் மிக கனமழைக்கு வாய்ப்பு

சென்னை:, நவ.17-
சென்னை: தமிழகத்தில் நாளை(17-ந்தேதி) சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் கன முதல் மிக கனமழைக்கான ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது.
தெற்கு இலங்கை மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக, இலங்கை கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ளது. இது வட மேற்கு திசையில் மெதுவாக நகர்ந்து செல்கிறது.



இதன்காரணமாக இன்று முதல் நவ.22ம் தேதி வரை கடலோர தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.
அதன்படி, இன்று கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களுக்கு மிக கனமழைக்கான ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. விழுப்புரம், அரியலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.
நாளை(நவ.17) சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், மயிலாடுதுறை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் கன முதல் மிக கனமழைக்கான ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. மேலும், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "விருதுநகர் தொகுதியில் அதிமுகதான் போட்டி" ராஜேந்திர பாலாஜி திட்டவட்டம்

விருதுநகர், நவ.16-
விருதுநகர் சட்டப்பேரவைத் தொகுதியில் அதிமுகதான் போட்டியிடும் என்று முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி தெரிவித்தார்.
விருதுநகரில் மேற்கு மாவட்ட அதிமுக சார்பில் வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கே.டி.ராஜேந்திர பாலாஜி தலைமை வகித்துப் பேசியதாவது: வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணியை பார்த்து திமுக பதறிப்போகிறது. திமுகவினர் போலி வாக்காளர்களை நம்பி தான் தேர்தலில் நிற்க முடியும்.
அதிமுகவுக்கு யாரைக் கண்டும் பயம் கிடையாது. மக்களுக்கு மட்டுமே பயப்படுவோம். ஆனால், திமுக எதை கண்டாலும் பயப்படுகிறது. திமுகவினர் ஆட்சி அதிகாரம் பறிபோகப் போகிறது என்ற ஆதங்கத்தில் பழியை தேர்தல் ஆணையத்தின் மீது போட்டு தப்பித்துக் கொள்ளப் பார்க்கின்றனர்.
தற்போது பொதுச் செயலாளர் பழனிசாமியிடம் அதிமுக பத்திரமாக இருக்கிறது. அவரை



ஏமாற்றிவிடலாம், ஒழித்து விடலாம் என்று சில சதி காரர்கள் சூழ்ச்சி செய்தார்கள். அந்த சூழ்ச்சிகளை எல்லாம் அடித்து நொறுக்கி பவுர்ணமி நிலவாக ஒளிர்கிறார் பழனிசாமி.
அதிமுக தேசபக்தி உள்ள இயக்கம். பெரியதுச் செயலாளர் பழனிசாமி ஒரு தேசபக்தர். நாட்டை பாதுகாக்கிற தலைவர் நரேந்திர மோடி. பாஜகவோடு அதிமுக கூட்டணி வைத்ததில் என்ன தவறு இருக்கிறது? இதுதான் ஆன்மீக பலம் பொருந்திய கூட்டணி.
திமுகவினர் டெல்லிக்கு சென்றால் பாஜகவுடன் உறவு, அதுவே சென்னைக்கு வந்தால் பகைபோல் வேஷம் போடுகின்றனர். திமுகவுக்கு வாக்களித்த சிறுபான்மையின மக்கள் ஏமாற்றத்தில் உள்ளனர். பாஜக உள்ளே வந்து விடும் என திமுக மக்களை பயமுறுத்தி ஏமாற்றி வருகிறது. பாஜகவில் உள்ளவர்கள் என்ன வெளிநாட்டினரா? நமது சகோதரர்கள். வேறுபாட்டை புகுத்தி குழப்பத்தை உருவாக்கி வெற்றிபெற நினைக்கிற திமுகவின் சதி செயலை வரும் 2026 தேர்தலில் முறியடிப்போம்.
விருதுநகர் சட்டப்பேரவைத் தொகுதியில் அதிமுகதான் போட்டியிடும். இத்தொகுதி கூட்டணி கட்சிக்கு போய்விடும் என்று பயப்பட வேண்டாம். இது வெற்றி பெறக்கூடிய தொகுதி. 50 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அதிமுக வேட்பாளர் வெற்றி பெற்று வரலாற்றை உருவாக்குவோம். இவ்வாறு அவர் பேசினார்.

# மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் கட்டியதில் முறைகேடு: பழனிசாமிக்கு எதிராக சிபிஐ விசாரணை கோரி வழக்கு

சென்னை:, நவ.17-

சென்னை: கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் 11 மாவட்டங்களில் புதிதாக மருத்துவக் கல்லூரிகளுடன் கூடிய மருத்துவ மனைகள் கட்டப்பட்டதில் முறைகேடு நடந்துள்ளதாகக் கூறி முன்னாள் முதல்வர் பழனிசாமிக்கு எதிராக சிபிஐ விசாரணை கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இதுதொடர்பாக திருவாரூர் மாவட்டம் நன்னிலம் தாலுகா முடிகொண்டானைச் சேர்ந்த என்.ராஜசேகரன் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு: கடந்த அதிமுக ஆட்சியில் ராமநாதபுரம், கள்ளக்குறிச்சி, திருவள்ளூர், அரியலூர், நாகப்பட்டினம், விருதுநகர், திருப்பூர், கிருஷ்ணகிரி, நீலகிரி, நாமக்கல், திண்டுக்கல் ஆகிய 11 மாவட்டங்களில் புதிதாக மருத்துவக்கல்லூரிகளுடன் கூடிய மருத்துவமனைகள் கட்டப்பட்டன. இதைக் கட்ட மத்திய அரசு 60 சதவீதம், மாநில அரசு 40 சதவீதம் நிதி வழங்கியுள்ளன.



முன்னாள் முதல்வரும், முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சருமான பழனிசாமியின் பதவிக்காலத்தில் தான் இந்த மருத்துவக் கல்லூரிகள் கட்டப்பட்டன. ஆனால் இவை கட்டப்பட்டதில் தேசிய மருத்துவ ஆணைய விதிகள் அப்பட்டமாக மீறப்பட்டு மத்திய, மாநில அரசுகள் ஒதுக்கிய கோடிக்கணக்கான தொகை தவறாக பயன்படுத்தப்பட்டு, முறைகேடு செய்யப்பட்டுள்ளது.

எனவே இந்த முறைகேடு தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரிக்கக் கோரி லஞ்ச ஒழிப்புத் துறையிடம் கடந்த 2021 ஜூலை 7ல் புகார் அளித்தும் நடவடிக்கை இல்லை. அதையடுத்து கடந்த 2022ல் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த வழக்கில் எனது புகார் தொடர்பாக ஆரம்பகட்ட விசாரணை நடந்து வருவதாக தமிழக அரசு தெரிவித்ததையடுத்து வழக்கை முடித்து வைத்து நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த முறைகேடு தொடர்பாக முன்னாள் முதல்வரான பழனிசாமிக்கு எதிராக வழக்குப்பதிவு செய்து விசாரிக்க சிபிஐக்கு உத்தரவிட வேண்டும்.

அதேபோல கடந்த 2023ம் ஆண்டு மாநில அரசின் ஒப்புதல் இல்லாமல் தமிழகத்தில் நடைபெறும் முறைகேடுகள் குறித்து சிபிஐ நேரடியாக வழக்குப்பதிவு செய்து விசாரிக்கலாம் என்ற அனுமதியை தமிழக அரசு வாபஸ்பெற்றது. இந்த அரசாணையை ரத்து செய்ய வேண்டும்.

# கடந்த 30 ஆண்டுகளில் முதல்முறை மாநிலங்களவை எம்.பி.க்களை இழக்கும் ஆர்ஜேடி

புதுடெல்லி, நவ.17-

பிஹார் தேர்தல் தோல்வியை அடுத்து, வரும் 2030ம் ஆண்டுக்குள் மாநிலங்களவையில் ஒரு எம்.பி. கூட இல்லாத கட்சியாக ராஷ்டிரிய ஜனதா தளம் மாறப் போகிறது.



பிஹார் சட்டப்பேரவைத் தேர்தல் என்டிஏ (ஐஜத பாஜக) கூட்டணி அமோக வெற்றி பெற்றது. மெகா கூட்டணி (ராஷ்டிரிய ஜனதா தளம் காங்கிரஸ்) படுதோல்வி அடைந்தது. இதில் ராஷ்டிரிய ஜனதா தளம் (ஆர்ஜேடி) 25 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது.

இந்த தோல்வி மாநிலங்களவை தேர்தலில் ஆர்ஜேடிக்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்த உள்ளது. வரும் 2030ம் ஆண்டு பிஹாரில் அடுத்த சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும். அதற்கு முன்னதாக தற்போது ஆர்ஜேடி கட்சியில் உள்ள 5 மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக் காலமும் முடிந்துவிடும். அதன்பிறகு 30 ஆண்டு கட்சி வரலாற்றில் மாநிலங்களவையில் ஒரு எம்.பி.கூட இல்லாத கட்சியாக ஆர்ஜேடி மாறும்.

5 எம்.பி.க்கள்: ஆர்ஜேடியில் தற்போது மாநிலங்களவை எம்.பி.க்களாக உள்ள பிரேம் சந்த் குப்தா (ஆர்ஜேடி மாநிலங்களவை தலைவர்), ஏ.டி.சிங் ஆகியோரின் பதவிக் காலம் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முடிகிறது. பையாஸ் அகமதுவின் பதவிக்காலம் 2028ம் ஆண்டு ஜூலையில் முடிகிறது. மனோஜ் குமார் ஜா, சஞ்சய் யாதவ் ஆகிய இருவரின் பதவிக் காலம் 2030ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முடிகிறது.

அடுத்த 2026ம் ஆண்டு பிஹாரில் காலியாகும் 5 மாநிலங்களவை எம்.பி. பதவிக்கு தேர்தல் நடைபெறும். அப்போது ஆர்ஜேடி 2, ஐஜத 2, ராஷ்டிரிய லோக் மோர்ச்சா 1 என 5 இடங்களுக்கு தேர்தல் நடைபெறும். இந்த 5 இடங்களுமே என்டிஏ கூட்டணிக்கு செல்லும். இதன் மூலம் மாநிலங்களவையில் என்டிஏ கூட்டணி பலம் பெறும்.

அதேபோல், வரும் 2028ம் ஆண்டு பாஜகவில் 3, ஐஜத மற்றும் ஆர்ஜேடி.யில் தலா ஒருவரின் மாநிலங்களவை எம்.பி. பதவிக் காலம் முடிகிறது. இந்த 5 இடங்களும் கூட என்டிஏ கூட்டணிக்கே செல்லும்.

ஒவைசி ஆதரவு: பிஹார் தேர்தலில் அசாதுதீன் ஒவைசியின் ஏஐஎம்ஐஎம் கட்சி 5 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. இந்தக் கட்சி வரும் 2030ம் ஆண்டு நடைபெறும் மாநிலங்களவை தேர்தலில் ஒருவேளை ஆதரவளித்தால் ஒரு இடத்தில் மட்டும் ஆர்ஜேடி.க்கு மாநிலங்களவை எம்.பி. பதவி கிடைக்கும்.

ஆனால், அதற்கு வாய்ப்புகள் குறைவாகவே உள்ளது. ஏனெனில், பிஹார் தேர்தலில் கூட்டணியில் சேர விரும்பிய ஒவைசியை தேஜஸ்வி தவிர்த்துவிட்டார். இதனால் ஒவைசியின் ஆதரவு கிடைப்பது கடினம்.





# இராமநாதபுரம் ஆயுதப்படையில் சரக டி.ஐ.ஜி வருடாந்திர ஆய்வு

இராமநாதபுரம்,நவ.17:

இராமநாதபுரம் மாவட்ட ஆயுதப்படையில் இராமநாதபுரம் சரக காவல்துறை துணைத்தலைவர் முனைவர் பா.மூர்த்தி வருடாந்திர ஆய்வு மேற்கொண்டார்கள்.

ஆய்வின் போது, ஆயுதப்படை காவலர்கள் பயன்படுத்தும் உடை பொருட்கள், உபகரணங்கள் மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தின் அனைத்து காவல் வாகனங்களும் பரிசோதிக்கப்பட்டன.பின்னர்,காவல் அதிகாரிகள் மற்றும் ஆளுநர்களின் குறைகள் குறித்து கேட்டறிந்து மனுக்களை பெற்றுக் கொண்டார்.தொடர்ந்து, ஆயுதப்படையின் ஆயுத வைப்பறை பராமரிப்பு மற்றும் பதிவேடுகளை ஆய்வு செய்து அறிவுரைகள் வழங்கினார். இந்த நிகழ்வில் இராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.சந்தீஷ் ஐ.பி.எஸ் உடனிருந்தார்.



# புலி வருது, புலி வருது’ என்பது போல ஆந்திராவுக்கு மடைமாறிய முதலீடு

## நயினார் நாகேந்திரன் கிண்டல்

சென்னை, நவ.17-

சென்னை: “தமிழக இளைஞர்களுக்குக் கிடைக்க வேண்டிய 20,000 நேரடி வேலைவாய்ப்புகள் இன்று பறிபோயுள்ளன. ‘புலி வருது, புலி வருது’ என்பது போல ஒவ்வொரு முறையும் தாங்கள் முதலீடு வருகிறது என்று விளம்பரம் வெளியிடுவதும், பின் அந்த முதலீடு அண்டை மாநிலத்திற்குச் சென்றுவிட்டதாய் செய்தி வருவதும் தொடர் கதையாகி வருகிறது.” என்று தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் சாடியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்த பதிவில், “முதலீடுகளைக் கோட்டை விடும் முதல்வரே, தமிழகத்தில் ரூ.1720 கோடி முதலீடு செய்யவிருந்த தென்கொரிய நிறுவனம் ஹ்வாசங், தற்போது தமிழகத்தை விட்டு ஆந்திராவில் முதலீடு செய்யவிருப்பதாய் அறிவித்த சேதி அறிவீர்களா?

‘தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன்’ என்று வீண் பேச்சு பேசும் முதல்வரே, உங்கள் விடியா அரசாங்கத்தின் விளைவாகத் தான் தமிழக இளைஞர்களுக்குக் கிடைக்க வேண்டிய 20,000 நேரடி வேலைவாய்ப்புகள் இன்று பறிபோயுள்ளன. ‘புலி வருது, புலி வருது’ என்பது போல ஒவ்வொரு முறையும் தாங்கள் முதலீடு வருகிறது என்று விளம்பரம் வெளியிடுவதும், பின் அந்த முதலீடு அண்டை மாநிலத்திற்குச் சென்றுவிட்டதாய் செய்தி வருவதும் தொடர் கதையாகி வருகிறது.

முதலீட்டை ஈர்க்கிறேன் என வெளிநாடுகளுக்குப் பயணம் சென்றுவிட்டு வெறுங்கையுடன் திரும்புவது, தானாகக் கிடைத்த முதலீட்டையும் எந்தவொரு முயற்சியும் எடுக்காது கோட்டை விடுவது, தமிழகத்தின் எதிர்காலத்தைச் சிதைப்பது என மும்முரமாக இருக்கும் நீங்கள், மீண்டுமொரு முறை ஆட்சிக் கோட்டையைப் பிடித்து தமிழகத்தைத் தலை நிமிரச் செய்வேன் என்று கூறுவதை நினைத்தால் சிரிப்புத் தான் வருகிறது முதல்வரே.” என்று பதிவிட்டுள்ளார்.

# பிஹாரில் 11 ஆக குறைந்த முஸ்லிம் எம்எல்ஏக்கள்

புதுடெல்லி, நவ.17-

பிஹாரில் முஸ்லிம்கள் சுமார் 20 சதவிகிதம் பேர் உள்ளனர். அதன்படி 45 எம்எல்ஏக்கள் இருக்க வேண்டும். ஆனால், இந்த முறை 11 முஸ்லிம்கள் மட்டுமே வெற்றி பெற்றுள்ளனர். சீமாஞ்சல் பகுதியில் முஸ்லிம் வாக்காளர்கள் அதிகம். இங்கு அசாதுதீன் ஒவைசியின் ஏஐஎம்ஐஎம் கட்சி 5 தொகுதிகளை மீண்டும் பெற்றுள்ளது.




மேலும், இதர பல பகுதிகளில் எதிர்க்கட்சிகளின் மெகா கூட்டணிக்கான முஸ்லிம் வாக்குகளையும் ஒவைசி கட்சி பிரித்துள்ளது. ஏஐஎம்ஐஎம் கட்சியில் 2020 தேர்தலில் வெற்றி பெற்ற 5 எம்எல்ஏ.க்களில் 4 பேர் ஆர்ஜேடியில் இணைந்தனர். அவர்கள் இந்த தேர்தலில் அதே தொகுதிகளில் போட்டியிட்டனர். எனினும், வேறு புதிய முஸ்லிம் வேட்பாளர்களுக்கு ஏஐஎம்ஐஎம் வாய்ப்பளித்து வெற்றி பெற வைத்துள்ளது.

தற்போது ஆர்ஜேடி 3, காங்கிரஸ் 2 மற்றும் ஐஜத.வில் ஒருவர் வெற்றி பெற்று எம்எல்ஏ.க்களாகி உள்ளனர். கடந்த 1985 தேர்தலில் 34 முஸ்லிம்கள் எம்எல்ஏ.க்களானார்கள். அந்த நேரத்தில் ஜார்க்கண்ட் மாநிலம் பிரிக்கப்படாமல் ஒன்றுபட்ட பிஹாரில் 324 தொகுதிகள் இருந்தன. கடைசியாக நடைபெற்ற 2020 தேர்தலிலும் 19 முஸ்லிம்கள் எம்எல்ஏக்களாக இருந்தனர். ஆனால், தற்போது இது 11 ஆக குறைந்துள்ளது.

இந்த தேர்தலில் முஸ்லிம்களுக்கு பாஜக வாய்ப்பளிக்கவில்லை. இதன் கூட்டணி கட்சியான சிராக் பாஸ்வானின் லோக் ஜன சக்தியில் முஸ்லிம்கள் போட்டியிட்டும் வெற்றி பெறவில்லை.

# மேயர் இல்லாததால் மதுரை மாநகராட்சியில் திமுக மார்க்சிஸ்ட் இடையே அதிகார மோதல்!

மதுரை, நவ.17-

மதுரை மாநகராட்சியில் திமுக 67 கவுன்சிலர்களை பெற்றிருந்தும், மேயர், மண்டலத் தலைவர்களை நியமனம் செய்யப்படாதது திமுக மார்க்சிஸ்ட் கட்சிகளின் நிர்வாகிகள், கவுன்சிலர்கள் இடையே நிர்வாக ரீதியாக திரைமறைவு அதிகார மோதலை ஏற்படுத்தி உள்ளது.




மதுரை மாநகராட்சி சொத்துவரி முறைகேட்டில் கணவர் பொன்வசந்த் கைது செய்யப்பட்டதால் மேயர் இந்திராணி பதவியை ராஜினாமா செய்தார். இந்த வழக்கில் விசாரணைக்கு அழைக்கப்பட்ட 5 மண்டலத் தலைவர்களும் ராஜினாமா செய்தனர். மேயர் இல்லாததால் இயல்பாகவே துணை மேயர் நாகராஜன், மேயர் (பொ) என்ற பொறுப்புக்கு வந்திருக்க வேண்டும். ஆனால், ஆளும் கூட்டணியில் மார்க்சிஸ்ட் கட்சி அங்கம் வகிப்பதால் துணை மேயர் நாகராஜன், மாநகராட்சி நிர்வாகத்திடம் தான்தான் மேயர்(பொ) என்று கேட்க முடியாமலும், அவருக்கு மேயருக்குரிய அதிகாரத்தை மாவட்ட ஆளும்கட்சி அதிகார மையங்கள் விட்டுக் கொடுக்காமலும் உள்ளனர்.

அதனால், 100 வார்டுகளிலும் இரு கட்சி நிர்வாகிகளும், அதன் கவுன்சிலர்களும் திரைமறைவு அதிகார மோதலில் ஈடுபட்டுள்ளனர். மேயர் இல்லாததால் அவரது இடத்தில் துணைமேயர் நாகராஜன் தங்கள் வார்டுகளில் வந்து மக்கள் குறை கேட்பது, ஆய்வு செய்வதையும் திமுக கவுன்சிலர்கள் விரும்பவில்லை. இந்த நேரத்தில் திமுகவுடன் மோதினால், அது சட்டப்பேரவைத் தேர்தல் கூட்டணியில் விரிசலை ஏற்படுத்தி விடும் என்று மார்க்சிஸ்ட் கட்சியினர் அடக்கி வாசிக்கின்றனர்.

ஆனாலும், துணை மேயருக்கும், திமுக கவுன்சிலர்களுக்கும் திரைமறைவு அரசியல் மோதல் அனைத்து நிலைகளிலும் நடந்து வருகிறது. அதன் காரணமாகவே, நேற்று முன்தினம் துணைமேயர் பங்கேற்ற ரூ.2,300



கோடி மதிப்பிலான பாதாள சாக்கடை திட்ட ஆலோசனைக் கூட்டத்தை பெரும்பாலான திமுக கவுன்சிலர்கள் புறக்கணித்தனர்.

இது குறித்து திமுக கவுன்சிலர்கள் சிலர் கூறுகையில், ‘‘மாநகராட்சியில் 67 திமுக கவுன்சிலர்கள் இருந்தும் மேயர், மண்டலத் தலைவர்கள் இல்லாத சூழல். இத்தகைய நிலை வேறு எந்த மாநகராட்சியிலும் இல்லை. சொத்துவரி முறைகேடு வழக்கில் போலீஸார் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்த பின்னரே மேயர் நியமனம் என அமைச்சர்கள், மாவட்ட செயலாளர்கள் கூறி தப்பிக்க பார்க்கின்றனர். உண்மை என்ன என்று அவர்களுக்கே தெரியும். மேயராக யாரை கொண்டுவர வேண்டும் என்பதில் அவர்களுக்கிடையே நிலவும் அதிகார போட்டிதான் பிரச்சினையே.

இதில் கட்சி தலைமை அதிரடியாய் முடிவெடுத்து மேயரை நியமிக்காவிட்டால் அது வரும் தேர்தலில் கட்சிக்கு பெரிய பின்னடைவை ஏற்படுத்திவிடும். மதுரை திமுகவில் யார் நியாயமாக செயல்படுகின்றனர், யாரை மேயராக நியமித்தால் நிர்வாகம் சுமூகமாக செல்லும் என்ற தகவல் கட்சி தலைமைக்கு உளவுப் பிரிவு மூலம் தெளிவாக சென்றடைகிறது.

எனினும் மவுனம் காப்பது கட்சியினருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கட்சி தலைமை என்ன முடிவெடுத்தாலும் தொண்டர்கள் ஏற்றுக் கொள்வது சகஜம். அதை விடுத்து தாமதப்படுத்துவது கட்சியினரிடையே கடும் மனக்கசப்பை அதிகரிக்கத்தான் உதவும்” என்றனர்.

# டெல்லி கார் குண்டு வெடிப்பு வழக்கு: அல் பலா பல்கலையின் 2 மருத்துவர்கள் உட்பட 3 பேரிடம் போலீஸார் தீவிர விசாரணை

புதுடெல்லி, நவ.17-

டெல்லி கார் குண்டு வெடிப்பு வழக்கில் அல் பலா பல்கலைக்கழகத்தின் 2 மருத்துவர்கள் உள்ளிட்ட மேலும் 3 பேரை பிடித்து போலீஸார் விசாரித்து வருகின்றனர்.




டெல்லி செங்கோட்டை அருகில் கடந்த 10ம் தேதி மாலை ஒரு கார் வெடித்து சிதறிய சம்பவம் நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இந்த குண்டு வெடிப்பை நிகழ்த்திய மருத்துவர் உமர் நபி ஹரியானா மாநிலம் பரிதாபாத்தில் உள்ள அல் பலா பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரியில் பணியாற்றி வந்தவர். இது தொடர்பாக 3 மருத்துவர்கள் உட்பட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் ஹரியானாவின் தவுஜ், நூஹ் மற்றும் அதை ஒட்டிய பகுதிகளில் டெல்லி போலீஸார் மற்றும் மத்திய அமைப்புகளின் அதிகாரிகள் வெள்ளிக்கிழமை இரவு ஒருங்கிணைந்த சோதனை மேற்கொண்டனர். இந்த சோதனையில் உமர் நபிக்கு தெரிந்த 2 மருத்துவர்கள் உள்ளிட்ட 3 பேரை டெல்லி போலீஸார் தங்கள் பிடியில் கொண்டு வந்தனர்.

இதுகுறித்து அதிகார வட்டாரங்கள் கூறியதாவது: ஹ் பகுதியில் அல் பலா பல்கலைக்கழகத்தை சேர்ந்த முகம்மது, முஸ்தாகிம் என்ற மருத்துவர்களை என்ஐஏ உதவியுடன் டெல்லி போலீஸார் தங்கள் பிடியில் கொண்டு வந்தனர். இவர்கள் உமர் நபியின் நெருங்கிய நண்பர்கள். மேலும் தீவிரவாத சதி வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள மருத்துவர் முஜாம்மில் உடன் தொடர்பில் இருந்துள்ளனர்.

இவர்களில் ஒருவர், கார் குண்டு வெடிப்பு நாளில் டெல்லியில் இருந்துள்ளார். இருவருக்கும் இந்த வழக்கில் தொடர்பு உள்ளதா என்பது குறித்து தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. இதுபோல் நூஹ் பகுதியில் உரிமம் இல்லாமல் உரம் விற்பனை செய்த தினேஷ் என்கிற தாப்பு போலீஸ் பிடியில் உள்ளார். வெடிகுண்டு தயாரிக்க பயன்படும் என்பிகே உரம் வாங்க தீவிரவாதிகள் ரூ.3 லட்சம் செலவிட்டிருப்பது தெரியவந்ததால் அவர்களுக்கு தினேஷ் உரம் விற்பனை செய்தாரா என்பது குறித்து போலீஸார் விசாரிக்கின்றனர். இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.



■ பாராட்டு விழா" மதுரை தமிழ் திரைகலைஞர்கள் நலசங்கம் சார்பில் செயலாளர் கணகு தலைமையிலும், தலைவர் இயக்குனர் ரே முன்னிலையிலும் செவாலியர் டாக்டர் வி.ஜி.பி.சந்தோசம் ராகவி சினி ஆர்ட்ஸ் சார்பிலும், நீலாவதி டிரஸ்ட் சார்பிலும் திரைப்பட இயக்குனரும், நடிகரும், தென்னிந்திய நடிகர் சங்க உறுப்பினரும், சமூக சேவகருமான சேவா ரத்னா டாக்டர் ஜெ.விக்டர், ஜெ.செல்வராஜ், எழுத்தாளர் விவேக்ராஜ், மதிவாணன், பால் பாண்டி, மேக்கப் ஆர்ட்டிஸ்டும், நடிகையுமான அங்கிதா, நடிகை புனிதா, நடிகை ஒத்தக்கடை மகாலெட்சுமி பொன்னாடை போர்த்தி வாழ்த்துக்கள் கூறினார்கள்.

# எங்களுடன் யார் வேண்டுமானாலும் கூட்டணிக்கு வரலாம் - திமுக விஜய்க்கு தொல்லை தருவதில்லை : அமைச்சர் அன்பில் மகேஷ் பேட்டி

திருச்சி, நவ.17-

திருச்சி சௌராஸ்ட்டிரா தெரு பகுதியில் தனியார் சார்பில் நடத்திய இலவச கண் பரிசோதனை முகாமை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ரிப்பன் வெட்டி தெடங்கி வைத்தார். பின்னர் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நிருபர்களிடம் கூறும் பொழுது சிவகங்கை மாவட்டத்தில் ரிவ்யூ மீட்டிங் நடந்த பொழுது ஆசிரியர்கள் உபகரணங்கள் குறித்து கூறியுள்ளனர். இந்த கோரிக்கை களை துணை முதலமைச்சரிடம் வைத்துள்ளனர். அது தொடர்பாக ஆய்வு செய்து உபகரணங்கள் மாற்றி அமைக்கப்படும் எனக் கூறியுள்ளார். மத்திய அரசு எப்படி எல்லாம் நிதியை நிறுத்தி வைத்துள்ளது என்பது உங்களுக்கு தெரியும். அதையும் கடந்து ஒவ்வொரு பள்ளிகளுக்கும் நாங்கள் 25 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்கிறோம். முறையாக அதை பார்த்து வாங்கி அவர்கள் பயன்படுத்த வேண்டும். நானும் ஒரு பொருளை வாங்கினேன் என்றில்லாமல் அந்த பள்ளிக்கு என்ன விளையாட்டு உபகரணங்கள் தேவையோ எந்த விளையாட்டை அவர்கள் பள்ளியில் பயிலும் மாணவர்களை ஈடுபடுத்துகிறார்களோ அதற்கு ஏற்றார் போல்



வாங்க வேண்டும் . இதுகுறித்து அனைத்து பள்ளி கல்வி அலுவலர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளது .

திமுக விஜய்க்கு தொல்லை தருவது கிடையாது , தேர்தல் ஆணையர் மூலமாக ஒரு உத்தரவு வரும்பொழுது அதற்கு பூத் அலுவலர்கள் வேலை பார்க்கின்றனர். இவர்கள் அனைவரும் தேர்தல் ஆணையத்தின் கட்டுப்பாட்டில் சென்று விடுவர். தேர்தல் ஆணையம் யார் கட்டுப்பாட்டில் உள்ளது என்பது நம் அனைவருக்கும் தெரிந்தது. அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் பி எல் ஏ 2 போட்ட ஒரே இயக்கம் திமுக தான். எங்களுடன் யார் வேண்டுமானாலும் வரலாம் மக்களின் வாக்குரிமையை காக்கக்கூடிய பணியில் அனைவரும் ஒன்று சேர்ந்து ஈடுபட வேண்டும்.

நம்மைப் பொறுத்தவரை தமிழக முதல்வர் இந்தியா கூட்டணியை சார்ந்த தலைவர்கள் என அனை வரும் அனைத்தையும் எதிர்கொள்வதற்கான ஆற்றல் படைத்தவர்கள் என முதல்வர் கூறியுள்ளார்.

இந்தியா கூட்டணியில் காங்கிரஸ் 125 தொகுதிகள் கேட்கும் எனக் கூறியுள்ளார்களே எனக் கேட்டபோது..... ஒவ்வொருவரும் அவர்கள் இயக்கம் சார்ந்து அதை முடிவு செய்ய வேண்டியது அந்தந்த தலைவர்கள் தான் இது சார்ந்து நான் கருத்து கூற முடியாது.

இவ்வாறு அமைச்சர் மகேஷ் பொய்யாமொழி கூறினார்.

# மலையாளம் எனது இரண்டாவது தாய்மொழி காந்திகிராம பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் கவிஞர் பத்மஸ்ரீ சிற்பி பாலசுப்ரமணியம் பேச்சு

சின்னாளபட்டி, நவ.17-

மலையாளம் எனது இரண்டாவது தாய்மொழி; என்று காந்திகிராம பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் கவிஞர் பத்மஸ்ரீ சிற்பி பாலசுப்ரமணியம் பேசினார். திண்டுக்கல் மாவட்டம் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் மலையாள ஆய்வுகள் மையம் சார்பில் நடத்தப்பட்ட தமிழ் - மலையாள இலக்கிய உறவுகள் என்னும் தலைப்பிலான ஒருநாள் கருத்தரங்கம் தமிழ்த்துறையின் குறள் அரங்கத்தில் நடைபெற்றது. விழாவிற்கு பல்கலைக்கழகத் துணைவேந்தர் ந.பஞ்சநதம் தலைமை தாங்கினார். தமிழ்த்துறைத் தலைவர் பா.ஆனந்தகுமார் தனது வரவேற்புரை ஆற்றினார். மலையாள ஆய்வுகள் மையத்தின் இயக்குநரும் கருத்தரங்க ஒருங்கிணைப் பாளருமான பேராசிரியர் எஸ்.ஷாஜி நோக்கவுரையாற்றினார். பல்கலை துணைவேந்தர் பஞ்சநதம் தனது தலைமையுரையில் "இரு பெரும் மொழிகளைச் சேர்ந்த ஆளுமைகளின் கருத்து ரைகள் மாணவர்களுக்கு அந்த மொழிகள் மீதான பற்றுதலையும் புரிதலையும் ஏற்படுத்த வாய்ப்பளிக்கும். எனவே, இதுபோன்ற இருமொழி சார்ந்த கருத்தரங்கங்கள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும்" என்றார். அவரை அடுத்து பேசிய கவிஞர் சிற்பி பாலசுப்ரமணியம் தனது உரையில் "தமிழ் எனது தாய்மொழி. மலையாளம் எனது இரண்டாவது தாய்மொழி. இருமொழிகளும் ஒரே மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை. தமிழும் மலையாளமும் சகோதர உறவுடையதா? தாய் - மகள்




உறவுடையதா என்பதில் அறிஞர்களுக்கிடையில் சர்ச்சைகள் இருந்தாலும் இருமொழிகளுக்கிடையிலான இலக்கிய உறவு என்பது அறுபடாதது. தமிழ் இலக்கியத்தில் சங்ககாலம் தொட்டு பக்தி இலக்கியம் வரை மலையாளக் கவிஞர்களின் பங்களிப்பு உள்ளது. அதேபோல மலையாளத்தின் முதல் காப்பியமான ராமசரிதத்தைத் தமிழ்க் காப்பியம் என்றே அதன் ஆசிரியர் குறிப்பிடுகிறார். அந்த வகையில் இருமொழிகளும் அதன் இலக்கிய வளங்களால் நெருங்கிய தொடர்புடையவை ஆகின்றன . இருமொழிகளு க்கும் பாலமாக அமையும் வகையில் இன்றைய தமிழ் - மலையாள, மலையாள - தமிழ் மொழிபெயர்ப்புகள் நடந்து வருகின்றன. அவை மேலும் தொடர வேண்டும் " என்றார். விழாவில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் பா.ஆனந்தகுமார் அவர்களால் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட தற்கால மலையாளச் சிறுகதைகள் என்னும் நூல் கவிஞர் சிற்பி அவர்களால் வெளியிடப்பட்டது. நூலின் முதல் பிரதியினைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து நடைபெற்ற அமர்வுகளில் கேரள கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் மேனாள் இயக்குநரும் மொழியியல் அறிஞருமான நடுவட்டம் கோபாலகிருஷ்ணன் சங்க இலக்கியமும் கேரளமும் என்ற தலைப்பில் கருத்துரையாற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் துறை மேனாள் இயக்குநர் ராஜசேகரன் நாயர் மலையாளத் தமிழ் உறவுகள் என்னும் தலைப்பில் பேசினார். கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் ஜெயகிருஷ்ணன் ஒப்பீட்டுப் பார்வையில் தமிழ் ரூ மலையாள இலக்கியமும் கலாச்சாரமும் என்னும் தலைப்பிலும், தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத்துறை உதவிப்பேராசிரியர் விஜய ராஜேஸ்வரி தமிழ் மலையாள நாவல் மொழிபெயர்ப்புகள் ஓர் ஆய்வு என்ற தலைப்பிலும் கருத்துரையாற்றினர். பிற்பகல் நடைபெற்ற நிறைவு விழாவில் நுண்கலைத்துறை இணைப்பேராசிரியர் கேசவராஜராஜன் வரவேற்புரை யாற்றினார்கள். பல்கலைக்கழகப் பதிவாளர் (பொ) சுந்தரமாரி நிறைவுப் பேருரையாற்றினார். நிறைவாக இந்தித்துறைப் பேராசிரியர் மொகல் சலீம் பெய்க் நன்றி கூறினார். கருத்தரங்கில் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மாணவர்கள், பேராசிரியர்கள், கௌரவ விரிவுரையாளர்கள், ஆய்வாளர்கள், நியூ செஞ் சுரி புத்தக நிறுவன த்தினர் ஆகியோர் பார்வையாளர்களாகப் பங்கேற்றனர்.



# திருச்சியில் ஓபிஎஸ் அணி கூண்டோடு எடப்பாடி கே.பழனிச்சாமியுடன் அதிமுகவில் இணைந்தனர்

திருச்சி, நவ.17-

திருச்சியில் எடப்பாடி கே.பழனிச்சாமியுடன் முன்னாள் அரசு வழக்கறிஞரும், முன்னாள் திருச்சி மாநகர் மாவட்ட அவை தலைவர் ஆர். ராஜ்குமார் தலைமையில் நிர்வாகிகள் மாநகர் மாவட்ட அதிமுக செயலாளர் ஜெ.சீனிவாசன் முன்னிலையில் ஓபிஎஸ் அணி கூண்டோடு அதிமுகவில் இணைந்தனர். புதிய நிர்வாகிகள் நிருபர்களிடம் கூறியதாவது: ஓபிஎஸ் அணியில் உள்ள அனைத்து நிர்வாகிகளும் எடப்பாடி தலைமையில் அதிமுகவின் இணைவார்கள். 2026 தேர்தலில் அதிமுக கூட்டணி ஆட்சியை பிடிக்கும் என்றும் கூறினர்.ஓபிஎஸ் அணியில் இருக்கிற முக்கிய முன்னாள் அமைச்சர்கள், எம்எல்ஏக்கள் அனைவரும் விரைவில் எடப்பாடியுடன் இணைவர் என கூறினர். திருச்சி மேற்கு தொகுதி ஓபிஎஸ் அணி அமைப் பாளர் பால்ராஜ் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.



■ திருச்சி மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட உறையூர் காவேரி மண்டபத்தில் வாக்காளர்களுக்கு முன் நிரப்பப்பட்ட படிவங்கள் வழங்கப்பட்டதை மீளப்பெற்று அதனை செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டுவரும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித்தலைவருமான வே.சரவணன் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைவாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.



# திருச்சி மலைக் கோட்டையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பணியில் குளறுபடிகளை கண்டித்து த.வெ.க. ஆர்ப்பாட்டம்

திருச்சி, நவ.17-

தமிழகத்தில் கடந்த வாரம் முதல் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் பணி நடைபெற்று வருகிறது.இதில் பல்வேறு குளறுபடிகள் நடந்து வருவதாக அரசியல் கட்சியினர் புகார் கூறி வருகின்றனர்.

இந்நிலையில் தமிழக மக்களின் வாக்குரிமையை பறிக்கும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ. ஆர்.) குளறுபடிகளை எதிர்த்து தமிழகம் முழுவதும் தமிழக வெற்றிக் கழகத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அதன்படி திருச்சி மாவட்ட ஒருங்கிணைந்த தமிழக வெற்றி கழகம் சார்பில் திருச்சி மலைக்கோட்டை சறுக்குபாறை அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு த.வெ.க துனை பொதுச் செயலாளரும், கொள்கை பரப்பு இணைச் செயலாளருமான ராஜ் மோகன் தலைமை தாங்கினார்.

திருச்சி மாநகர் மாவட்ட செயலாளர் சந்திரா, திருச்சி புறநகர் வடக்கு மாவட்ட செயலாளர் ஜெகன் மோகன், புறநகர் மேற்கு மாவட்ட செயலாளர் ரவிசங்கர், புறநகர் கிழக்கு மாவட்ட செலாளர் லால்குடி விக்னேஷ் , கிழக்கு தொகுதி கரிகாலன், திருவெறும்பூர் தொகுதி அருள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் செந்தில், மகளிரணி துளசி,வடக்கு மாவட்ட துணை செயலாளர் எஸ் எஸ்.சிவா,சுந்தர் கோ. கார்த்திக் மலைக்கோட்டை சிவசங்கர் உள்ளிட்ட நிர்வாகிகள் ஏராளமானவர்கள்கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாடத்தில் தப்குழப்பாதே, குழப்பாதே வாக்காளர்களை குழப்பாதே,எஸ்.ஐ. ஆர்.ஐ காட்டிக் குழப்பாதே, வாக்கா ளர்களை கழிக்காதே, வாக்குரிமையை பறிக்காதே, எங்கள் ஜனநாயக உரிமை பறிக்காதே என்று கோஷங்களை எழுப் பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் திருச்சி மாவட்டத்தில் பல்வேறு பகுதியிலி ருந்து ஏராளமான த.வெ.க. நிர்வாகிகள் தொண்டர்கள் மகளிர் அணியினர் கலந்து கொண்டனர்.



■ திருச்சி தெற்கு மாவட்ட திமுக செயலாளரும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி SIR கீழ் திருவெறும்பூரில் அரியமங்கலம் விஸ்வாஸ் நகரில் அமைந்துள்ள தனது இல்லத்திகு வருகை புரிந்த பாக எண் 147 ற்கு உட்பட்ட வாக்காளர் பதிவு அலுவலரிடம் (BLO) ஆவணங்களை சமர்ப்பித்து, திருவெறும்பூர் தொகுதி பட்டியலில் தனது பெயரை உறுதிப்படுத்திக்கொண்டார். இந்நிகழ்வின் போது மாநகரக் கழகச் செயலாளர் மு. மதிவாணன் பகுதிச்செயலாளர் வி.ஜெயக்குமார் வட்டக் கழக செயலாளர் சண்முகம் மற்றும் பாக முகவர் மற்றும் பாக டிஜிட்டல் முகவர் ஆகியோர் உடனிருந்தனர்.

# 2026 சட்டமன்ற தேர்தலுக்கான சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்த பணிகளை ஆத்தூர் தொகுதி தலைமைக்கழக தேர்தல் பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி ஆய்வு

## ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட சில்வார்பட்டி, கே.புதுக்கோட்டை, அழகுபட்டி, முருநெல்லிகோட்டை, கே.புதுக்கோட்டை, குருநாதநாயக்கனூர், புதுசத்திரம், பலக்கனூத்து, ஊராட்சிகளை சேர்ந்த 39 வாக்குச்சாவடி மையங்களுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு சென்று ஆய்வு

சின்னாளபட்டி, நவ.17-

2026 சட்டமன்ற தேர்தலுக்கான சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்த பணிகள் நடைபெற்று வரும் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட சில்வார்பட்டி, கே.புதுக்கோட்டை, அழகுபட்டி, முருநெல்லிகோட்டை, கே.புதுக்கோட்டை, குருநாதநாயக்கனூர், புதுசத்திரம், பலக்கனூத்து, ஊராட்சிகளை சேர்ந்த 39 வாக்குச்சாவடி மையங்களுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு சென்று ஆய்வு செய்தார்.



திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதியின் முடிசூடா மன்னராக ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி உள்ளார். கடந்த 33 வருடங்களாக ஆத்தூர் தொகுதியில் போட்டியிட்டு வரும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் கடந்த 5வருடங்களுக்கு முன்பு தமிழகத்தில் அதிமுக ஆட்சி நடைபெற்ற 10 வருடங்களில் நடைபெற்ற இரண்டு தேர்தலிலும் மாபெரும் வெற்றிபெற்றார். 2021ம் சட்டமன்ற தேர்தலில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை எதிர்த்து போட்டியிட்ட அனைவரையும் டெபாசிட் இழக்க செய்ததோடு சட்டமன்ற தேர்தல் வரலாற்றில் வரலாறு காணாத மாபெரும் வெற்றிபெற்றார். வரும் 2026 சட்டமன்ற தேர்தலுக்காக மத்திய அரசு சிறப்பு தீவிர வாக்காளர் திருத்த பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்காக அரசு ஊழியர்கள் வீடு தவறாமல் வாக்காளர் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை வழங்கி வருகின்றனர் இந்த பணிகளை திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக அவைத் தலைவர் வழக்கறிஞர் காமாட்சி தலைமையில் ஆத்தூர் தொகுதி தலைமைக்கழக தேர்தல் பொறுப்பாளர் கள்ளிபட்டி மணி மற்றும் அப்பகுதியை சேர்ந்த ஒன்றிய செயலாளர் மணி, மாணவரணி அமைப்பாளர் செல்வம், ஊராட்சி மன்ற முன்னால் தலைவர்கள் தனலெட்சுமி சண்முகம், பண்ணீர் செல்வம், பழனிச்சாமி, முருநெல்லிகோட்டை சின்னு, புதுசத்திரம் ஊராட்சி லெட்சுமி ஆகியோருடன் சென்று வாக்காளர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் முறையாக கொடுக்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்தனர். அப்போது தலைமைக்கழக தேர்தல் பொறுப்பாளர் மணி, அங்கன்வாடி மைய பணியாளரிடம் முறையாக விண்ணப்பத்தை விநியோகம் செய்யுங்கள் வாக்காளர்கள் விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்ய தடுமாறினால் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து வாக்காளர் பட்டியலில் சேர்க்க உதவி செய்யுங்கள் என்றார்.



■ II (Teacher Eligibility Test - II ) எழுத்து தேர்வுகள் நடைபெற்று வருவதையொட்டி திருச்சி மாவட்டம், அரசு சையது முர்துசா மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்ட காட்சி.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000